

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழக செயல்பாடுகள் பற்றிய ஆய்வுக் கூட்டம் அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது. இதில் துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# வேளாண்மை பல்கலைக் கழக ஆராய்ச்சிகள் பற்றிய ஆய்வுக் கூட்டம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நடைபெற்றது

சென்னை, ஏப். 04 -

வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக செயல்பாடுகளை ஆய்வு செய்தார். இதில் வ. தட்சிணாமூர்த்தி வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், பா. முருகேஷ், இயக்குநர் வேளாண்மைத் துறை, பெ. குமரவேல் பாண்டியன், இயக்குநர் தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், முனைவர். தமிழ்வேந்தன். துணைவேந்தர் (பொ) தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம், முனைவர். ஆர். முருகேசன் தலைமைப் பொறியாளர். வேளாண்மை பொறியியல் துறை, இயக்குநர் ஊரக மேம்பாட்டு மையம், இயக்குநர் நெல் ஆராய்ச்சி மையம், ஆடுதுறை, இயக்குநர் பயிர் பாதுகாப்பு மையம், இயக்குநர் வேளாண் விரிவாக்கம் மற்றும் விஞ்ஞானிகள் மற்றும் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறை இயக்குநர்கள். துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சட்டமன்ற பேரவையில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் தென்னையில் ரூகோஸ் சுருள் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்தார். இது குறித்த தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுப்படுத்தும் முறைகள் மற்றும் இது தொடர்பாக நடைபெற்று வரும் ஆராய்ச்சி முடிவுகளைக் கேட்டறிந்து இம்முறைகளை பாதிக்கப்பட்ட தென்னை வயல்களில் செயல்படுத்தி பூச்சிகளை முழுமையாக இரண்டு மாதத்திற்குள் கட்டுப்படுத்த அறிவுறுத்தினார். மேலும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலர், தமிழ்நாடு பல்கலைக்கழகம். காசர்கோடு மத்திய மலைப்பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் தோட்டக்கலை & மலைப்பயிர்கள் துறையுடன் இணைந்து தென்னந்தோப்புகளில் கூட்டாக வயலாய்வு செய்து, தென்னையில் வெள்ளை ஈ தாக்குதலை விரைந்து கட்டுப்படுத்த கேட்டுக்கொண்டார்.

மேலும், தென்னையில் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்த இயற்கையில் முறையில் என்கார்சியா ஒட்டுண்ணி, அபர்டோகிரைசா முட்டைகள், விளக்கெண்ணெய் தடவிய மஞ்சள் ஒட்டும் பொறிகள், ஊடுபயிராக வாழை அல்லது ஒட்டுண்ணி எண்ணிக்கையை எடுக்குமாறு அறிவுரை வழங்கினார். கல் வாழை பயிரிடுவதன் மூலம் அதிகப்படுத்த நடவடிக்கைகள்

மேலும், இக்கூட்டத்தில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளும் பயிர் இரகங்கள், காய்கறி இரகங்களின் ஆராய்ச்சிகளை துரிதப்படுத்தி அதிக உற்பத்தி திறன் தரவல்ல பல்வேறு புதிய இரகங்களை விரைவாக வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் உத்தரவிட்டார்.

மேலும் நெல், பயறு வகைகள், நிலக்கடலை. கரும்பு போன்ற பயிர்களில் விவசாயிகள் விருப்பத்திற்கேற்ப அதிக உற்பத்தி திறன் உடைய புதிய இரகங்கள் ஆராய்ச்சி மேற்கொண்டு குறிப்பிட்ட காலத்திற்குள் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தற்போது விவசாயிகளால் அதிக பரப்பளவில் பயிரிடப்படும் தமிழ்நாட்டிற்கு அறிவிக்கை செய்யப்பட்ட அதிக மகசூல் தரக்கூடிய இதர மாநிலங்களின் இரகங்கள் தமிழ்நாட்டிற்கு அறிவிக்கை செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொண்டார்.

மேலும் மா மற்றும் இதர தோட்டக்கலை பயிர்களில் ஏற்படும் நோய் மற்றும் பூச்சிக் தாக்குதல் கட்டுப்படுத்த தேவைப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார்.

கடலூர் கிழக்கு மாவட்டத்தில்

# கழக அணிகளின் பொறுப்புகளுக்கு விண்ணப்பம்!

## அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வேண்டுகோள்!

கடலூர்,ஏப்.4-

08.04.2025 செவ்வாய்க்கிழமை அன்று கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த கடலூர் மாநகரம், மஞ்சக்குப்பம், புதுபாளையம், திருப்பாதிரிபுலியூர், துறைமுகம் ஆகிய பகுதி கழகங்களுக்கு கழக சார்பு அணிகளின் பொறுப்புகளுக்கு விருப்பம் உள்ள கழக தோழர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்படும் என வேளாண்மை உழவர்நலத்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர், கடலூர் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த கடலூர் மாநகரம் மற்றும் மஞ்சக்குப்பம், புதுபாளையம், திருப்பாதிரிபுலியூர், துறைமுகம் ஆகிய பகுதி கழகங்களுக்கு நிரபப்பபடாமல் இருக்கும் கழக சார்பு அணிகளின் பொறுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கழக தேர்தல் பணிக்குழு செயலாளர், முன்னாள் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் இள.புகழேந்தி தலைமையிலும், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், கடலூர் கிழக்கு மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், கடலூர் மாநகர கழக செயலாளர் கே.எஸ்.ராஜா, கடலூர் கிழக்கு மாவட்ட கழக துணை செயலாளர் அ.ஞானமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் வருகின்ற 08.04.2025 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை கடலூர் திமுக மாநரக கழக அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பெறப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் கடலூர் மாநகர கழகத்திற்கு மாணவர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அணி, இலக்கிய அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நலஉரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, சுற்றுசூழல் அணி, அயலக அணி, அமைப்புசாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய அணிகளுக்கும் மற்றும் மஞ்சக்குப்பம் பகுதி, புதுப்பாளையம் பகுதி, திருப்பாதிரிபுலியூர் பகுதி, துறைமுகம் பகுதி ஆகிய பகுதி கழகங்களுக்கு தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, மீனவர் அணி, கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை அணி, இலக்கிய அணி, வழக்கறிஞர் அணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு, வர்த்தகர் அணி, சுற்றுச்சூழல் அணி அயலக அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி ஆகிய சார்பு அணிகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

எனவே விருப்பம் உள்ளவர்கள் உறுப்பினர் அட்டை, வாக்காளர் அடையாள அட்டை, கல்வி சான்றிதழ், ஆகியவற்றுடன் வந்து விருப்பம் உள்ள பொறுப்புக்கு விண்ணப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம் அறிக்கையில் கூறியுள்ளார்.

பன்முக ஆற்றல் கொண்ட

# மூத்த பத்திரிகையாளர் சிவஞானம் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஏப்.4-

பன்முக ஆற்றல் கொண்ட மூத்த பத்திரிகையாளர் சிவஞானம் இயற்கையெய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மறைந்த சிவஞானம் குடும்பத்தினருக்கு தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்ப தாவது:-

மூத்த பத்திரிகையாளர் சிவஞானம் அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு அதிர்ச்சி அடைந்தேன்.

மதுரையில் தீக்கதிர், தினகரன் ஆகிய நாளேடுகளிலும் சென்னையில் பாலிமர், புதிய தலைமுறை, கலைஞர் செய்திகள் ஆகிய தொலைக் காட்சிகளிலும் பணியாற்றியவர் சிவஞானம். தலைவர் கலைஞரின் நெஞ்சுக்கு நீதியை 230 வாரங்கள் தொடராகக் காட்சிப்படுத்தியதோடு, தலைவர் கலைஞருக்கே உரிய கரகரக் குரலில் பேசியவர் சிவஞானம் அவர்கள். கட்டுரையாளர், எழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் எனப் பன்முக ஆற்றலைக் கொண்டவர்.



சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் வாழ்க்கை வரலாற்று நூலை 'அரக்கர்' என்ற தலைப்பில் மிகச் சிறப்பாகப் மொழி பெயர்த்துள்ளார். இத்தகைய ஆற்றல்மிக்க ஆளுமைக்குணம் தாங்கிய அவர் உடல்நலக்குறைவால் காலமானது அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. அவருக்கு எனது அஞ்சலியைச் செலுத்துகிறேன். அவரது மனைவி, மகன், மகள், நண்பர்களுக்கு இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாகப் புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 04.04.2025 | சென்னை கிழக்கு | அம்பத்தூர் | யாதவாள் தெரு, பாடி, அம்பத்தூர் | இந்திரகுமார் தேரடி, அ.தஸ்னீம் பானு |
| 2 | 04.04.2025 | சென்னை கிழக்கு | திரு.வி.க நகர் | சந்திரயோகி சமாதி சாலை, மங்களபுரம் | மாண்புமிகு கோவி.செழியன், செ.ஜோதி காமாட்சிராஜன் |
| 3 | 04.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | திருவிடைமருதூர் | கதிராமங்கலம் கடைவீதி, திருவிடைமருதூர் | பேராசிரியர் சுப.வீரபாண்டியன், ரா.கருணாநிதி |
| 4 | 04.04.2025 | அணைக்கட்டு | வேலூர் | பேருந்து நிலையம், ஒடுகத்தூர் | திண்டுக்கல் ஐ.லியோனி, எம்.முகமது ஜபீர் |
| 5 | 05.04.2025 | தஞ்சாவூர் வடக்கு | கும்பகோணம் | சோழபுரம் கடைவீதி, கும்பகோணம் | நாஞ்சில் சம்பத், மு.காவியா |
| 6 | 05.04.2025 | கிருஷ்ணகிரி மேற்கு | வேப்பனஹள்ளி | சூளகிரி | சூர்யா கிருஷ்ணமூர்த்தி, சி.பவித்ரா |
| 7 | 05.04.2025 | திருவாரூர் | நன்னிலம் | கலைஞர் அரங்கம், மஞ்சக்குடி | கம்பம் செல்வேந்திரன், வீ.வேல்முருகன் |
| 8 | 05.04.2025 | திருச்சி வடக்கு | மண்ணச்சநல்லூர் | எதுமலை பிரிவு ரோடு | ராஜகம்பீரன் அப்பாஸ், ப.வெங்கடேஷ் |
| 9 | 05.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | திண்டுக்கல் | என்.ஜி.ஓ.காலனி, உழவர் சந்தை அருகில் | மதுரை எஸ்.பாலா, அ.சுஹாசினி |
| 10 | 06.04.2025 | கிருஷ்ணகிரி கிழக்கு | பர்கூர் | போச்சம்பள்ளி | நாஞ்சில் சம்பத், கு.முரளிகிருஷ்ணன் |
| 11 | 06.04.2025 | திண்டுக்கல் கிழக்கு | நிலக்கோட்டை | மதுரை ரோடு, வத்தலகுண்டு | ராஜகம்பீரன் அப்பாஸ், துரை தினகரன் |
| 12 | 06.04.2025 | திருச்சி வடக்கு | துறையூர் | வடக்குத் தெரு, நால் ரோடு, ந.குணசீலன் தெரு | முனைவர் இரா.தி.சபாபதி மோகன், அ.சார்மதி |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 02–04–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி